சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி மு.மீனா என்பவரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஆடி மாதம் 10-ம் நாள்

அரசாணை (3டி) எண்.108

நாள்:26.07.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 143854 / 2022, நாள் 06.02.2023.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தூத்துக்குடி, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் புதுக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்த போது 29.07.2018 அன்று, பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் இரா.முத்துக்குமார் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மனைவி திருமதி மு.மீனா என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அநிபி6 / 73498 / 2020, நாள் 21.12.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்து, சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அபபி3/24212/2021-3, நாள் 10.01.2022-ன்படி, தனியர், சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) 24.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

Scanned with AnyScanner

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி மு.மீனா என்பவரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ. சா. எண்.1769/2023, நாள்.01.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண். 1769/2023, நாள்.07.07.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
திருமதி மு.மீனா, இளநிலை உதவியாளர், (பிணையமற்றது)
வழி: வேளாண்மை ஆணையர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.1769/ வேநி9 / 2023
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது // 27/07/23
பிரிவு அலுவலர்

27/7/23

Scanned with AnyScanner

சென்னை–6, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்
அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை : டாக்டர். இரா. பிருந்தாதேவி. இ.ஆ.ப.,

செ.மு.ஆணை எண். அபபி.3 / 24212 /2021 –2 நாள் : 27.09.2023

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திருமதி.மு.மீனா அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக பணி நியமனம் செய்து ஆணை வழங்கியது – பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை :
1. சென்னை.5, வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அநிபி6 / 173498/2020, நாள்.21.12.2021.
2. சென்னை.5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அபபி3/ 24212 /2021, நாள். 10.01.2022.
3. சென்னை.5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி3/ 24212 /2021, நாள். 21.11.2022.
4. அரசாணை (3டி) எண்.108, வேளாண்மை – உழவர் நலத் (வேநி.9) துறை, நாள்.26.07.2023.

*****

ஆணை:

பார்வை 1 –ல் காணும் சென்னை5, வேளாண்மை ஆணையரின் செயல்முறை ஆணையில், தூத்துக்குடி, வேளாண்மை இணை இயக்குநரின் அலுவலக கட்டுப்பாட்டில், புதுக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில், உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வந்தபோது பணிக்காலத்தில் 29.07.2018 அன்று அமரான திரு.இரா.முத்துக்குமார் அவர்களின் வாரிசுதாரர்/மனைவி திருமதி.மு.மீனா அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500– 71900 ( Level -8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணிநியமனம் செய்து தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனை தொடர்ந்து, பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 24.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

3) அன்னாரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு அரசுக்கு அனுப்பிட சென்னை.5, வேளாண்மை இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து பார்வை 4–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) ஆக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மு.மீனா அவர்களது பணியினை 24.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் அப்பணிக்கு தேவையான உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆணையிடப்பட்டுள்ளது.

Scanned with AnyScanner

மேற்படி தனியரின் பணியினை வரன்முறைபடுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், இளநிலை உதவியாளருக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து, இளநிலை உதவியாளர் ( பிணையமற்றது) பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வு பெறத் தகுதி உடையவராகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– இரா. பிருந்தாதேவி
தோட்டக்கலை இயக்குநர்

பெறுநர்

திருமதி. மு.மீனா, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்
நகல் : பட்டியல் பிரிவு, இவ்வலுவலகம் ( இரு நகல்களில்)
நகல் : சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–8
நகல் : அபபி2 / அபபி4 – இருப்பு கோப்பு
நகல் : பணிப்பதிவேட்டிற்கு

// ஆணைப்படி //

4/10/23
ஆட்சி அலுவலர்–1

04/10/2023

Scanned with AnyScanner